Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 55

வெள்ளிக்கிழமை 20 ஜனவரி 2023

தை 06 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054

# தேர்தலில் தோற்றாலும் அரசாங்கம் மாறாதாம்!

## ஐ.தே.க.வின் பொதுச்செயலர் பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 20**

**இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல் மூலம் ஆட்சியை மாற்றமுடியாது. அரசு தோல்வியடைந்தாலும் ஜனாதிபதி அப்படியே இருப்பார். நாடாளுமன்றமும் அப்படியே இருக்கும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.** »11

கோரமின்மை காரணமாக

## ஒத்திவைக்கப்பட்டது யாழ். மேயர் தெரிவு

பெயர் பிரேரித்த பின்னர் ஒத்திவைப்பால் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வர் தெரிவு கோரம் போதாமையால் நேற்று நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டது.

சபையின் மேயராகப் பதவி வகித்த மணிவண்ணனின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப் பட்டதைத் தொடர்ந்து பதவி விலகியிருந்தார்.

புதிய மேயரைத் தெரிவு செய்வதற்கான »11

யாழ். மாநகரசபை விவகாரம்;

## முதல்வர் தெரிவுக்கூட்டம்: ஒத்திவைப்பு நியாயமற்றது

உள்ளூராட்சி ஆணையாளருக்கு எதிராக உறுப்பினர்கள் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாநகரசபைக்கான இடைக்கால முதல்வர் தெரிவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நியாயமற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டியுள்ள யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் 20 பேர், உள்ளூராட்சி ஆணையாளர் தன் தவறை நிவர்த்திசெய்யத் தவறினால் சட்ட நடவடிக்கைக்குச் செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒத்திவைப்பு முறையற்றது என ஆட்சேபித்து நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றிய 20 உறுப்பினர்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி »11



யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

## அரச அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 20

ஜனாதிபதி ரணிலின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்ட தேசியப் பொங்கல் விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை ஆரம் »11

## தமிழ்த் தேசியக் கட்சிகளை இன்று ஓரணியில் சந்திக்கிறார் ஜெய்சங்கர்

யாழ்ப்பாணம், ஜன. 20

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இன்று தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் சந்திக்கவுள்ளார். கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. »11

முஸ்லிம்களையும், மலையகத் தமிழர்களையும்

## தனித்தனியாக அழைத்து பேச்சை முன்னெடுப்போம்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 20

இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என ஒவ்வொருவருக்கும் தனித் தனிப் பிரச்சினை இருப்பதன் காரணமாகவே நாம் அனைவரையும் ஒன்றாக இணைத்துப் பேச்சு நடத்தவில்லை. அவர்களைத் தனித் »11

## அமைச்சர்களாக பவித்ரா, ஜீவன்!

கொழும்பு, ஜன. 20

பவித்ரா வன்னியாராச்சி மற்றும் ஜீவன் தொண்டமான் இருவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை அமைச்சர்களாகப் பொறுப் »11

## உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்துவது சரியானதாம்

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

விரிவு:- பக்.09

போதைப்பொருளால்

## சிறையில் இருந்தவர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

4 ஆண்டுகளாக உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். »11

## 100 கிராம் ஹெரோய்ன்: ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன. 20

100 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினரால் நேற்றையதினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள கண்ணாடி விற்பனை நிலையமொன்றின் உரிமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். மேற்படி நபர் »11





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 13 நிறைவேற்றப்படுவதால் தமிழருக்கு நன்மையில்லை

### அமரசேகரவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன.20

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் நோக்கமே நிறைவேறும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது.

இவ்வாறு தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர் குணதாச அமரசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று வடக்கு மக்களுக்கு வாக்குறுதியை வழங்கி இருக்கிறார். வடக்கு, கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தருகின்றேன் என்றும் கூறி வருகிறார். இதைக் கூறுவதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது. அதை நிறைவேற்ற வேண்டுமாயின் அவருக்கு மக்களாணை வேண்டும். அது அவரிடம் காணப்படுகின்றதா?

ரணிலை ஜனாதிபதியாக தெரிவு செய்தது 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றவோ அல்லது நாட்டில் புரட்சி ஏற்படுத்தி அதன் ஊடாக அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவோ அல்ல. அதிகாரத்தை விட்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலப்பகுதியில் எஞ்சியிருக்கும் காலப்பகுதியை முன்னெடுத்து செல்லவும், நாட்டு மக்களை வழிநடத்தவும் மற்றும் நாட்டை பாதுகாக்கவும் என்பதை ரணில் புரிந்து கொள்ளவேண்டும்.

மக்களாணை பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு முறையாக நாட்டை ஆள முடியாமல் தப்பியோடிய கோத்தாபயவுக்குப் பதிலாக வெற்றிடமாக காணப்பட்ட ஜனாதிபதி பதவியை நிரப்புவதற்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த எந்தவொரு அதிகாரமும் தற்பொழுது ரணிலுக்கு கிடையாது. கோத்தாபய ராஜபக்சவால் நிறைவேற்ற முடியாமல் விட்டுச்சென்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்வதே அவருடைய தற்போதைய பொறுப்பாகும்.

ஜனாதிபதி ரணில் அரசியலில் இருந்து மக்களால் ஒதுக்கப்பட்ட மற்றும் தேர்தலின் போது நிராகரிக்கப்பட்டதோடு நாடாளுமன்றத்தில் கூட அங்கம் வகிக்கத் தகுதியில்லாத நபர். இவ்வாறான ஒருவருக்கு அரசமைப்பை மாற்றுவதற்கு எப்படி அதிகாரம் இருக்கிறது. அதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதால் யாருக்கு இலாபம்? அதன் பயனை யார் பெற்றுக்கொள்ளப் போவது? இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ரணில் ஆர்வம் காட்டுகிறார். அவர்கள் இலங்கை மீது முழுமையாக அதிகாரத்தை பயன்படுத்தி 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கும் அதில் ஒரு பங்கு இருக்கிறது. அன்று 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜே.ஆர். ஜயவர்த்தன கைச்சாத்திட்டபோது அமெரிக்கத் தூதரகத்தினரே முதலில் வாழ்த்து செய்தி அனுப்பினர். எம்மைப் பொறுத்தமட்டில் இந்தியா மற்றும் அமெரிக்காவே இதன் பின்னணியில் இருக்கிறது.

நாட்டில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கபோவதில்லை - என்றார். (எ-இ)

## 13 ஆவது திருத்தம் நடைமுறை: ரணில் கூறுவதெல்லாம் பொய்

### சரத் பொன்சேகா காட்டம்



கொழும்பு, ஜன.20

குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் நோக்கத்துக்காக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவேன் என்று குறிப்பிடுகிறார். தெற்கு அரசியல்வாதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று வடக்குக்குப் பொய்யுரைக்கிறார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தினால் நாட்டில் தேவையில்லாத பிரச்சினை தோற்றம் பெறும். ஜனாதிபதியின் இந்த பாவச்செயலில் பங்குதாரராகுவதை தமிழ் அரசியல் தலைமைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

புனர்வாழ்வு பணியக சட்டத்தை கொண்டு அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் வன்மையான முறையில் அடக்கப்படுவது இயல்பாக இடம்பெறுகிறது. விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கும், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் போராளிகள் சுயமாகவே இராணுவத்தில் சரணடைந்தார்கள். புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அதனால் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களையும், விடுதலைப் புலிகள் போராளிகளையும் ஒரு கோணத்தில் பார்க்க முடியாது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் பணிகள் நீதிமன்ற நடவடிக்கை ஊடாக முன்னெடுக்கப்படவேண்டும். அதுவே போதைப்பொருள் அடிமையானவர்களுக்கு பாதுகாப்பானதாக அமையும்.

நாட்டு மக்கள் ஏழ்மை நிலையில் உள்ள போது மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. போதைப்பொருள் கடத்தல், ஏ.டி.ம். நிதி மோசடி, தங்க நகை அறுத்தல் உள்ளிட்ட சமூக விரோதச் செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபடுகிறார்கள். பாதாள குழுவினர் சுதந்திரமாக மனித படுகொலை சம்பவங்களில் ஈடுபடுகிறார்கள். நாட்டின் தேசிய பாது காப்பு மோசமாக உள்ளதுடன் நாடு அழிவை நோக்கிச் செல்கிறது. நாட்டு மக்கள் பட்டினியால் வாழும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை போல் அரசியல் நோக்கத்துக்காக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற முயற்சிக்கிறார் - என்றார். (எ-இ)

## நெல்லியடியில் சங்கிலி அறுப்பு

### சந்தேகநபர் கைது



யாழ்ப்பாணம், ஜன. 20

மோட்டார் சைக்கிளில் வந்து பெண்ணொருவரின் சங்கிலியை அறுத்துச் சென்ற இருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெல்லியடி விழுந்த ஆலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் வேலைக்குச் சென்று வீட்டின் கேற்றை திறக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரு கொள்ளையர்கள் 2 பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேகநபரை மோட்டார் சைக்கிளுடன் கைதுசெய்தனர். அவரிடமிருந்து அறுக்கப்பட்ட சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26.13)

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA
PHYSICS
R.RAAKULAN B.Sc
2023 A/L வகுப்பு
புதிய அலகு ஆரம்பம் 23.01.2023 திங்கட்கிழமை
முற்பகல் : 10.00 மணி
வெப்ப பௌதிகவியல்
2024 A/L வகுப்பு
புதிய பகுதி ஆரம்பம் 23.01.2023 திங்கட்கிழமை
காலை : 7.30 மணி
நிலையியல்
பாடசாலை விடுமுறை நாள்களில் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை வகுப்பு நடைபெறும்
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழமையான பாடங்கள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யானைகள் அட்டகாசத்தால் பெரும்போகம் துவம்சம்!

## விசுவமடு விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, ஜன. 20
உடையார்கட்டு கமநலசேவை பிரிவுக்குட்பட்ட விசுவமடு மேற்கு பகுதியிலுள்ள வயல்நிலங்களில் கடந்த சில நாள்களாக காட்டுயானைகள் புகுந்து காலபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நிலங்களை முற்றாக அழித்து வருகின்றன என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.



அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
உடையார்கட்டு, விசுவமடு மேற்கு பகுதியில் 450 ஏக்கரில் பெரும்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது நெற்கதிர்கள் அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளன.
இந்தநிலையில் கடந்த சில வாரங்களாக காலபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் விவசாய நிலங்களை யானைகள் உட்புகுந்து துவம்சம் செய்து வருகின்றன. யானைகளைத் துரத்துக்குவதற்கு தகரங்களைத் தட்டி தீ மூட்டி யானையை விரட்ட வேண்டியுள்ளது. அத்துடன் நெற்பயிர்களை நோய்த் தாக்கங்களிலிருந்து பாதுகாக்க பல லட்சம் ரூபா செலவழிக்கப்பட்டது. கடந்த சிறுபோக அறுவடையின்போது நெல் விற்பனை செய்ய முடியாது தேங்கியுள்ளது. உரம், கிருமிநாசினி மற்றும் விவசாய உள்ளீடுகள் என்பவை உரிய நேரத்தில் கிடைக்கப்பெறுவதில்லை.
இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் காலபோகப் பயிர்ச்செய்கை அறுவடைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் காட்டு யானைகள் அட்டகாசத்தால் அழிவை சந்திக்க நேரிடுகிறது.
இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காது அசமந்தப்போக்கையே கடைப்பிடிக்கின்றனர் என அவர்கள் மேலும் கவலை தெரிவித்தனர். (ச-113)

# மைத்திரிக்கான தண்டனை பொன்சேகாவுக்கும் ஆபத்து

## தயாசிறி எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.20
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு போர்க்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்ட இராணுவத்தினர், உயர் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்குவதற்கான தீர்ப்பு வழி சட்டமாக அமையலாம்.
இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளரான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்டிருந்தார். அந்த விவாதத்தில் சரத் பொன்சேகாவுக்கு பதிலளிக்கும் வகையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நல்லாட்சி அரசாங்கத்தில் சட்ட ஒழுங்கு அமைச்சு பதவியை வழங்காததாலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது கடும் விமர்சனங்களை முன்வைக்கின்றார். அவர் இராணுவத் தளபதியாக இருந்தவர் என்பதனால் அவரை பொலிஸ் அமைச்சராக நியமிக்க வேண்டாம் என்று பல்வேறு பொலிஸ் அதிகாரிகளும் கேட்டுக்கொண்டனர். அதனாலேயே அவருக்கு அந்த அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.
பொறுப்புக் கூறல் என்பது அனைத்து நாடுகளிலும் இருக்கும் விடயமாகும். கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள் செய்யும் குற்றங்களுக்கு உயர் பதவிகளில் இருப்பவர்கள் பொறுப்புக் கூறவேண்டும் என்பதே கால்டோனா சட்டமாகும். இந்தநிலையில் முதற்தடவையாக இலங்கையில் இது தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிக்கு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் வழக்கில் கால்டோனா சட்டத்தின் பிரகாரம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
இன்னும் சில காலத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இதுபோன்ற தீர்ப்பு வழங்கப்படலாம். முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் விமர்சனங்களை கூறிக்கொண்டு தானும் அது போன்ற குற்றங்களை செய்துள்ளார்.
இந்தத் தீர்ப்பின் ஊடாக போரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பில் முன்மாதிரியொன்று ஏற்பட்டுள்ளது. மனித உரிமைகள் சபையில் போர்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி அமெரிக்கா போக முடியாது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் கனடாவுக்கு போக முடியாது. போரால் ஏற்பட்ட நிலைமையே இதற்கு காரணமாகும்.
மனித உரிமைகள் பேரவையில் வழக்குத் தொடர்ந்தால் இவர்கள் அனைவரும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். இந்த நாட்டுக்காக சேவையாற்றிய போரின் வெற்றிக்காக உத்தரவிட்ட மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, சந்திரிகா குமாரதுங்க, சரத் பொன்சேகா ஆகியோரும் கோடிக் கணக்கில் நட்ட ஈட்டை செலுத்த வேண்டி வரலாம். முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான தீர்ப்பு இந்த அதிகாரிகளுக்கும் பயன்படுத்தலாம் என்பதனையே சுட்டிக்காட்டுகின்றது-என்றார். (எ-இ)

# குளத்திலிருந்து சடலம் மீட்பு!

யாழ், ஜன. 20
நல்லூர் நாயன்மார்கட்டுக் குளத்திலி ருந்து சடலம் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நாயன்மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை மகேஸ்வரி (வயது -56) என்பவரே சடலமாக மீட்கப்ப ட்டார்.
நீண்ட நாள்களாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு குளத்தில் குதித்து உயிரை மாய்த்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணை களில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14)


2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 03 1933



மறைவு 10 02 2021

அமரர் இரத்தினம் இராசம்மா

திதி:-20.01.2023 நினைவு நாள்:12.02.2023

உயிருக்குள் அடைகாத்து உதிரத்தை பாலாக்கி பாசத்தில் தாலாட்டி
பல இரவுகள் தூக்கத்தை தொலைத்து நமக்காகவே வாழ்ந்த
எங்கள் அன்னையே... நீங்கள் மறைந்து இரண்டு வருடங்கள்
உருண்டோடி சென்றுவிட்டது அம்மா...
ஆனால் இப்பவும் நீங்கள் நம் கூட வாழ்ந்துகொண்டுதான்
இருக்கிறீர்கள். இரண்டு வருடங்கள் அல்ல
எத்தனை வருடங்கள் சென்றாலும் நீங்கள்
நமக்குள் வாழ்ந்துகொண்டுதான் இருப்பீர்கள் அம்மா....
உங்கள் ஆத்மா சாந்திடைய ஆண்டவனை
பிரார்த்திக்கின்றோம். தாயே...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவில் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.38, 1ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


# கிணற்றிலிருந்து துப்பாக்கிகள் மீட்பு!



முள்ளிவாய்க்கால் பகுதியில் வீடொன்றின் கிணற்றிலிருந்து துப்பாக்கிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.
கிணற்றில் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று மக்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கிய தகவலையடுத்து அங்கு சென்ற சிறப்பு அதிரடிப்படையினர் கிணற்றைத் தோண்டி ஏ.கே துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி ஆகியவற்றை மீட்டனர். அதன் பின்னர் துப்பாக்கிகளை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் துப்பாக்கிகளை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் நடவடிக்கையை முல்லைத்தீவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023

மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு, ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப் படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகு கிறது.




இதுவரை ஜன்மச் சனியாக இருந்து பலன் தந்த சனிபக வான், இப்போது 2 ம் இடமாக பாதச் சனியாக அமர்ந்து பலன் தரப்போகிறார். ஆகவே, மகர ராசி அன்பர்கள் சற்றே நிம்மதிப் பெருமூச்சு விடலாம். ஆரோக் கியம், தொழில், பண விவகாரம் ஆகிய யாவும் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். மன அழுத்தம் தீர்ந்து நன்மைகள் நடக்கும். வேலை விஷயத்தில் நல் லதொரு வாய்ப்பு கிடைக்கும்; பயன்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனம்.

குடும்பத்தில் பெரியவர்களின் உடல் ஆரோக்கியம் மேம்படும். மருத்துவச் செலவுகள் குறையும். நண்பர்கள், உறவினர்கள் மூலமாக இருந்த கடன் தொல்லைகள் தீரும். வீடு, வாகனம் வாங்குவது மற்றும் மாற்றுவது யோக மாக இருக்கும். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். மொத்தத்தில் இந்தப் பெயர்ச்சி, கூண்டுப் பறவை சிறை மீண்டது போன்ற உணர்வைத் தருவதாக அமையும்.

**பெண்களுக்கு:** வாழ்க்கையில் தெளிவான முடிவு எடுக்கக்கூடிய தருணம் இது. தயங்காமல் செயல்படுங்கள். மனப் போராட்டங்கள் விலகும். வேலைக் குச் செல்லும் பெண்களுக்கு அலுவல கம் சார்ந்த பிரச்சினைகள் தீரும். புதிய வேலையை எதிர்நோக்கி இருந்தவர்களுக்கு, அவர்களின் முயற்சி வெற்றி தரும். அரசுப் பணி யில் உள்ளவர்களுக்கு எடுத்த காரியம் வெற்றியாகும்.

**மாணவர்களுக்கு:** உங்களின் தேகஆரோக்கியம் மேம் படும். விரும்பிய கல்வி நிறுவனத்தில், விரும்பிய பாடப்பிரிவில் சேர இடம் கிடைக்கும். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவிகளுக்குச் சற்று கவனம் தேவை. நண்பர்களைத் தேர்வு செய்யும்போது கவனம் வேண் டும். தங்களுடைய செயல்பாடுகளில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**உத்தியோகத்தர்களுக்கு:** இதுவரையிலும் இருந்து வந்த மன அழுத்தம் நீங்கும்; வேலைப்பளு குறையும். பணி மாற்றம், சம் பள உயர்வு, இடமாற்றம் ஆகிய அனைத்திலும் உங்கள் விருப்பம் நிறைவேறும். அரசுப் பணியில் உள்ளவர்கள், வங்கியில் உயர் அதி காரத்தில் உள்ளவர்கள் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது; வீண் பழிகள் வந்து சேர வாய்ப்பு உண்டு. மேலதிகாரிகளுடன் பகைமைப் போக்கு மாறும்.

**வியாபாரிகளுக்கு:** இதுவரை இருந்து வந்த மன அழுத்தம் நீங்கும். வியா பாரம் தொடர்பான காரியங்களில் வெற்றி கிடைக்கும். இரும்பு, எண்ணெய், பூமி போன்ற வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும். உலோகம், ரப்பர், ஜவுளி ஆகியவை தொடர்பான வியாபாரத்தில், கடன் வாங்குவதில் எச்சரிக்கை தேவை. கூட்டுத்தொழிலில் கவனம் வேண்டும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்குத் துளசி மற்றும் எலுமிச்சை மாலை சாற்றி வழிபடலாம். அமாவாசை தினங்களில் பசு மாடுகளுக்கு உணவு அளிக்கவும்.

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரி யத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர் கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லை கள் நீங்கும்.



**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்க வும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங் குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.



**கடகம்:** பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பா ராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய நேரிடும்.



**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடி யும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைப் பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.



**கன்னி:** பணவரவு திருப்தி தரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர் பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.



**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டா கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்க ளுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். ஆதாயம் உண்டாகும்.



**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூல மாகும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு.



**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மனதில் உற் சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பா கவும் பரபரப்பாகவும் செயற்படுவீர் கள். கருத்து வேறுபாடு நீங்கும்.



**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்படும். எதிர் பார்த்த காரியம் இழுபறியாகும். மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.



**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

# வெள்ளாங்குளம், தேவன்பிட்டி மக்களுக்கு எட்டாக்கனியாக மருத்துவ சேவைகள்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மன்னார், ஜன. 20

மாந்தை மேற்கு பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங் குளம் மற்றும் தேவன்பிட்டி போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஒழுங்கான மருத்துவ சேவைகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் தெரி விக்கையில்,

தேவன்பிட்டி கிராமத்தில் வசிக் கும் தொழிலாளி ஒருவருக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மரம் வெட்டும் இயந்திரம் கையில் வெட்டி பலத்த காயங் களுக்கு உள்ளாகினார்.

காயமடைந்த நபருக்கு சிகிச்சை பெற வெள்ளாங்குளம் மருத்து வமனை, முழங்காவில் மருத்து வமனை ஆகியவற்றுக்கு உற வினர்கள் முச்சக்கர வண்டியில் 3 மணித்தியாலங்களுக்கு மேலாக அலைந்து சென்றுள்ள னர்.

அதன்பின்னர் முழங்காவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அங்கிருந்து மன்னார் நோக்கிச் செல்லும்போது நோயா ளர் நிலைமை மோசமாகியது.

அதையடுத்து நோயாளர் காவு வண்டியைத் தொடர்புகொண்டு மருத்துவமனைக்குச் சென்ற னர். காலை 9 மணியளவில் கை வெட்டிய பின் 3 மணித்தி யாலங்கள் உரிய மருத்துவ சேவையைப் பெறமுடியாமல் நோயாளி சிரமப்பட்டுள்ளார்.

வெள்ளாங்குளம் அல்லது முழங்காவில் மருத்துவமனை நோயாளர் காவு வண்டியின் உதவி கிடைத்திருந்தால் உரிய நேரத்தில் உரிய சிகிச்சை பெற முடிந்திருக்கும். தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் முச்சக்கர வண்டிக்கான வாடகை அவர்களால் செலுத்த முடியாத நிலையிலும் சிகிச்சை யளிக்க பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

வெள்ளாங்குளம்மற்றும்தேவன் பிட்டி போன்ற கிராமங்களில் மருத்துவ சேவைகளைப் பெற பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றோம்.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனஞ்செலுத்தி எமது கிராமங்களுக்கு மருத்துவ சேவைகள் அனைத்தும் உரிய முறையில் கிடைக்க வழிசெய்ய வேண்டும்- என்றனர்.

(எ-14, 213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

"சிறிதளவு நெருப்பு சிறிதளவு வெப்பத்தையே தருவதைப்போல, பலவீனமான ஆசைகள் பலவீனமான விளைவுகளையே தரும்"
–நெப்போலியன் ஹில்லின்




# நேற்று தெற்கு ; இன்று வடக்கு..!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மூர்க்கத்தனத்தை இப்போது வடக்கிலும் காண்பிக்கத் தொடங்கியிருக்கின்றார். அவரது உண்மை முகத்தை வடக்கு மக்களும் உணரத் தொடங்கியிருப்பார்கள். இலங்கை அரசியல் வரலாற்றிலேயே ஜனாதிபதி ஒருவரை பதவியைத் துறந்து ஓடச் செய்யுமளவுக்கு மக்கள் புரட்சி தெற்கில் கடந்த ஆண்டு இடம்பெற்றது. அந்தப் புரட்சியின் விளைவாக – அரகலயப் போராட்டம் ஊடாக – பதவிக்கு வந்தவர்தான் ரணில் விக்கிரமசிங்க. ஆனாலும் பதவிக்கு வந்ததும் அவரது ஜனநாயகவாதி – மிஸ்டர் கிளீன் முகமூடிகள் எல்லாம் கிழியத்தொடங்கின. எந்தப் போராட்டங்களால் தனது நீண்டநாள் கனவான– ஏக்கமான ஜனாதிபதி பதவி கிடைத்ததோ, அந்தப் போராட்டக்காரர்களையே – அரகலயவினரையே – அடக்கி ஒடுக்கி முடக்கினார். படையினரை களமிறக்கி போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தியதுடன், போராட்டத்தின் தூண்கள் என்று கருதியவர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைப்படுத்தினார். இனியொரு போராட்டம் நடக்கக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனநாயகவாதி என்று நம்பும் மக்கள் வடக்கில் இன்னமும் இருக்கின்றார்கள். ஆனால் இப்போது வடக்கிலும் தனது கைவரிசையை பொலிஸாரை வைத்துக் காண்பிக்கத் தொடங்கியிருக்கின்றார் ரணில். அமைதிவழியில் தங்கள் எதிர்ப்புக்களை வெளிப்படுத்திய யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகம், சிவில் அமைப்புக்கள், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளை வேட்டையாடுவதற்கு ரணில் வியூகம் அமைத்திருக்கின்றார். தெற்கில் மாத்திரமல்ல வடக்கிலும் தனக்கு எதிராக எவரும் குரல் எழுப்பக் கூடாது. தமிழ் மக்கள் தங்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூட கோரக்கூடாது. அரச பயங்கரவாதத்தை எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது என்பதற்காகவே, கடந்த தைப்பொங்கல் அன்று போராடியோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ரணில் அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, எதிர்வரும் முதலாம் திகதி அம்பாறையில் ஆரம்பிக்கும் பேரணியொன்று, இலங்கையின் சுதந்திர நாளில் – பெப்ரவரி 4ஆம் திகதி – யாழ்ப்பாணத்தில் நிறைவடையும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியைவிட மிகப் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு – கிழக்கு பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த தடவையைவிட இம்முறை அதிகளவில் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. இதில், சிவில் சமூகத்தினர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் பேரணியை குழப்புவதற்காகவும், எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு எதிரான பேரணிகளில் கலந்துகொள்வதற்கே சகலரும் பயப்படவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு, ஜனாதிபதிக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை போராடியவர்களை கைது செய்யும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டதைப்போன்று இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் ஊடாக மனித உரிமைகள் நிலைவரத்தில் முன்னேற்றம், மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. மாறாக இன்னமும் மோசமான நிலையை நோக்கியே செல்கின்றது. இலங்கையின் மனித உரிமை நிலைமை இவ்வாறு மோசமாகவுள்ள சூழலில், உதவிகள் வழங்கும் தரப்புக்கள் இவை தொடர்பிலும் கரிசனை செலுத்தவேண்டும். மணி கட்டிய மாடுகள் சொன்னால்தான் ரணிலும் கேட்பார் போலும்

# வேலன் சுவாமி கைதுக்கு பிரிட்டன் எம்.பி. கண்டனம்

கொழும்பு, ஜன.20

யாழ்ப்பாணத்தில் இந்து சமயத் தலைவர் வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டதற்கு பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மைக்டொனாக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றில், 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஜனாதிபதிகள் மாற்றப்பட்டதன் மூலம் நாட்டின் மனித உரிமைகள் பதிவில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்ற மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சமீபத்திய மதிப்பீட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

போராட்டம் நடத்துவது மனிதனின் அடிப்படை உரிமை. இலங்கை ஜனாதிபதியின் யாழ்ப்பாண பயணத்தின்போது அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக சிவில் உரிமை செயற்பாட்டாளரும் இந்து சமய தலைவருமான வேலன் சுவாமிகள் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளமையை நான் கண்டிக்கிறேன். அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது மனிதனின் அடிப்படை உரிமை - என்று குறிப்பிட்டுள்ளார்.

(எ-இ)

# ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் மைத்திரியும், பொன்சேகாவும்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் சபையில் நேற்றுமுன்தினம் கடும் சொற்போர் மூண்டது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுத்தனர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தின்போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரியை கடுமையாக தாக்கி பேசி சர்ச்சையை ஆரம்பித்து வைத்தார் பொன்சேகா.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் முன்னாள் ஜனாதிபதிக்கு 100 மில்லியன் ரூபா இழப்பீட்டை செலுத்த வேண்டியுள்ள நிலையில், இழப்பீட்டை செலுத்த புறக்கோட்டையில் உண்டியலை குலுக்கப் போகின்றேன் என்று கூறியுள்ளார். உண்டியலை குலுக்கும் நபர்களை ஜனாதிபதியாக்கினால் நாட்டில் இப்படிதான் நடக்கும் என பொன்சேகா குறிப்பிட்டார்.

இதனால் கடுப்படைந்த மைத்திரிபால சிறிசேன, சரத் பொன்சேகாவுக்கு நான்தான் சுதந்திரம் வழங்கினேன். பீல்ட்மார்ஷல் பதவியைக்கூட வழங்க நடவடிக்கை எடுத்தேன். இராணுவ தலைமையகத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாத அவர், என்னை விமர்சிப்பது ஏற்புடையது அல்ல என்று பதிலடி கொடுத்தார்.

அதையடுத்துப் பொன்சேகா, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது என்னிடம் உதவிகோரி மைத்திரிதான் கெஞ்சினார். எனக்கு பீல்ட்மார்ஷல் பதவி வழங்கப்பட வேண்டும் என்பது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியாகும். இது தனிநபர் செய்த விடயம் அல்ல. சமாதானப் பேச்சு காலத்தில்தான் தாக்குதல் நடத்தப்பட்டது - என்று குறிப்பிட்டார்.

(எ-44)

**நாளை**

21.01.2023
சனிக்கிழமை
தை 07

சுபநேரம் : 03.35 – 05.05
ராகுகாலம் : 09.35 – 11.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பிற்போடின் போராட்டம் வெடிக்கும்!

## நாடாளுமன்று ஊடாக சூழ்ச்சி என எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு நாடாளுமன்றம் ஊடாக சூழ்ச்சி நடக்கிறது. தேர்தலைப் பிற்போட எந்தவிதத்திலும் இடமளிக்கமாட்டோம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போது ஜனாதிபதியால் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கட்சி தலைவர்கள் கூட்டம் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுக்கான செலவுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்ட வரைவை விவாதத்துக்கு எடுப்பதை ஒரு மாதத்துக்குப் பிற்போடுவதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இணக்கம் வெளியிட்டுள்ளார். நாடாளுமன்ற அதிகாரம் சபாநாயகருக்கே இருக்கின்றது. இது விடயத்தில் ஜனாதிபதி தலையிடுவது ஏற்புடையது அல்ல. நாட்டில் வெடித்த மக்கள் போராட்டத்தை மறந்துவிடவேண்டாம். மக்களைத் திரட்டி நாம் வீதியில் இறங்குவோம். இந்தச் சட்டவரைபுக்கு நாம் எதிர்ப்பு அல்ல. அது வரவேற்கக்கூடியது. ஆனால் நிறைவேற்றப்படும் காலப்பகுதிதான் சர்ச்சைக்குரியது- என்றார். (ச-44.22)

## இராசபோசனம் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 20

'இராசபோசனம்' என்ற தொனிப்பொருளில் சிறுதானியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை மல்லாகம் கல்லாரை வளர்பிறை முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் கொண்டாடப்பட்டது.

இதன்போது கலாநிதி பாலசிவகடாட்சத்தின் சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பும் 'பயன் அறிந்து உண்க' என்ற நூலும் வெளியிடப்பட்டது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், தமிழ் மக்களின் பண்டைய உணவுப் பண்பாட்டில் பிரதான இடத்தைப் பெற்றிருந்த சிறுதானியங்களை மீளவும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஏற்கனவே இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

சிறுதானியங்களை மீளவும் முடிசூட்டுவோம் என்ற கருப்பொருளில் அமைந்த இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகள் இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ச.முகுந்தன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ய-27)

## முதியோர் கொடுப்பனவு

சாவகச்சேரி, ஜன. 20

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கு ஜன வரி மாதத்துக்குரிய முதியோர் கொடுப்ப னவு நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படுகின்றது என பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். முதியோர்கள் அந்தந்த கிளை அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ய-9)

## மணிவிழாவும் நூல் வெளியீடும்

கச்சாய் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் கா.குணசிங்கத்தின் மணிவிழாவும் குணசிங்கநாதம் நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கச்சாய் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

## வாகன விபத்தில் கரடி உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜன. 20



கொக்காவிலுக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதிப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் கரடி ஒன்று உயிரிழந்துள்ளது. கரடியின் உயிரிழப்பு தொடர்பாக முல்லைத்தீவு வன உயிரிகள் திணைக்களத்தினர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் வழியாக இரவில் வாகனம் செலுத்தும்போது விலங்கினங்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு வாகனத்தைச் செலுத்துமாறு வன உயிரிகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14,19)

## 'மாற்றத்தின் சங்கமம்' கௌரவிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு, ஜன. 20

புதுக்குடியிருப்பு ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகளின் திறன்களை கௌரவிக்கும் வகையில் 'மாற்றத்தின் சங்கமம்' விருது வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு உடையாட்டு கிழக்கில் இடம்பெறவுள்ளது.

'ஒளிரும் வாழ்வு' அமைப்பின் சர்வதேச ஆலோசகர் ஜகத்குரு சுவாமி சரஹணபவ தலைமையில் நிகழ்வு இடம்பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (ச)



## இரணைமடுக்குளத்தின் 103 ஆவது பொங்கல்!

கிளிநொச்சி, ஜன. 20

இரணைமடு குளத்தின் 103 ஆவது ஆண்டுப் பொங்கல் நிகழ்வு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் சிறப்பாக நடைபெற்றது.

இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் 103 பானைகளில் விவசாயிகள் பொங்கல் பொங்கினர்.

குறித்த நிகழ்வில் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், விவசாய திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ம-113)

## அமரர் தர்மலிங்கம் சிலை திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 20

உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வலிகாமம் தெற்குப் பிரதேசசபையில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபை தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## இயந்திர அறுவடைக் கட்டணம் ஒரு பரப்புக்கு இம்முறையும் ரூ.500

சாவகச்சேரி, ஜன. 20

காலபோக நெற்செய்கை இயந்திர அறுவடைக்கு கடந்த வருடம் அறவிட்ட கட்டணம் இவ்வருடமும் அறவிடப்படவுள்ளது என்று நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அடுத்த வாரம் காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்..

கடந்த வருடம் பரப்புக்கு இயந்திரம் மூலம் அறுவடை செய்வதற்கு 500 ரூபா கட்டணம் அறவிடப்பட்டது.

தற்போது எரிபொருள்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையிலும் கமக்கார அமைப்புகள் விடுத்த வேண்டுகோளையடுத்து கடந்த வருடம் அறவிட்ட கட்டணத்தை அறவிட முடிவு செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர். (ஒ-14,9)

## பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்தந்த பாடசாலைகளால் அனுமதி அட்டைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 23ஆம் திகதி க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றுக்குள் அலைபேசி; நபருக்கு ரூ.1000 அபராதம்!

மன்னார், ஜன. 20

மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றுக்குள் அலைபேசி வைத்திருந்த நபரொருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்றில் காணி வழக்கொன்றுக்காக நபரொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சென்றிருந்தார். அவரின் வழக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கின் விசாரணை நடைபெற்றுக் கொண்டு இருந்த வேளை குறித்த நபரின் அலைபேசி மன்றில் பலத்த சத்தத்துடன் ஒலித்தது. அதனையடுத்து பொலிஸாரால் அலைபேசி கைப்பற்றப்பட்டது. வழக்கு முடிந்தவுடன் நபரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்ற கூண்டுக்குள் அடைத்தனர்.

ஒருசில மணிநேரம் கழித்து நபருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்த போது அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் நீதிமன்றுக்குள் வரும்போது நீதிமன்ற ஒழுங்கு முறைகளைக் கையாள வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் நீதிமன்ற ஒழுக்க விதிகளை பின்பற்றாது செயற்பட்டு இவ்வாறான நிலை ஏற்பட்டால் அலைபேசி கைப்பற்றப்படும் எனத் தெரிவித்து அலைபேசியை மீளவழங்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-14,60)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பழைய மாணவர் (கனடா) திரு. இராசையா - நாகராசா அவர்களின் அன்பு மனைவி திருமதி **சாந்தா நாகராசா** 17.01.2023 அன்று அமரத்துவம் அடைந்த துயரத்தில் உள்ள கணவர், குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/உ/சை/த/வித்தியாலயம்**

(CR 8439) (3/6)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## பதவி வெற்றிடம் - வாகனத் திருத்துனர் (Mechanic)- 2

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 28 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதி வெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்ட் இரண்டு வாகனத் திருத்துனர்களை ஏற்கனவே இருக்கும் எங்களுடைய வேலைத்தள அணியினருடன் சேர்த்துக்கொள்ள விரும்புகிறது.

✓ **தேவைப்படும் தகைமைகள்**

- ✓ இலகுரக மற்றும் பார ஊர்தி வாகனங்களைத் திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- ✓ 3 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ✓ முல்லைத்தீவு மாவட்டத்தில் (அலம்பில், செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய்) வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக மின்னிணைப்புக் கட்டுப்பாட்டு அமைப்புத் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பதும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

சம்பளமும் அதனுடன் தொடர்புபட்ட நன்மைகளும் அனுபவம் மற்றும் தகைமைகளைப் பொறுத்து பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள் என்பவற்றை 26 ஜனவரி 2023 வியாழக்கிழமைக்கு முன்பாக கீழ் உள்ள தபால் முகவரிக்கோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**
**E-mail: hr@halosrilanka.org**


## பாடசாலைகளுக்கு இன்றுமுதல் விடுமுறை

### பெப்ரவரி 17 இல் ஆரம்பம்

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று முதல் மூன்றாம் தவணை விடுமுறை வழங்கப்படுகிறது என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. 2022 பாடசாலை கல்வி ஆண்டின் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைகின்றன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளுக்காக நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்றுடன் விடுமுறை வழங்கப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதே வேளை க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி முதல் பெப்ரவரி 17ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிலையத்திற்கு களஞ்சிய காப்பாளர் (Store Keeper) மற்றும் விற்பனைப்பிரதிநிதி, சிட்டை எழுதுனர் உடன் தேவை. ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு-076 009 4946

## பெயர் மாற்றம்

இல.65 மருதடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **நீக்கிலஸ் ஜோண்** ஆகிய நான் எனது பெயரை **நீக்கிலஸ் ஜோண் சொர்ணராசா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **நீக்கிலஸ் ஜோண் சொர்ணராசா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs.23029) (2.6) **அ.நீ. ஜோ. சொர்ணராசா**

## பெயர் மாற்றம்

3 ஆம் வட்டாரம் அனலைதீவில் வசிக்கும் **வபிற்றா சுபாசினி தெய்வேந்திரன்** ஆகிய நான் எனது பெயரை **சுபாசினி தெய்வேந்திரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சுபாசினி தெய்வேந்திரன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs.23022) (2.6) **சுபாசினி தெய்வேந்திரன்**

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் விஜயரத்தினம் (ரத்தினம்)

**மண்ணுலகில்** **28.10.1947** **விண்ணுலகில்** **19.01.2023**



யாழ்ப்பாணம் நெடுந்தீவு நடுக்குறிச்சி 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விஜயரத்தினம் அவர்கள் நேற்று (19.01. 2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான தம்பையா நாகாத்தப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சோமசேகரம் (கோபாலு), சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாவதி, காலம்சென்ற தங்கமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோகநாயகி (லோகா-Canada), ஸ்ரீதரன் (மனோ- பிரதேச சபை-நெடுந்தீவு ), யசோதா (லதா), கிரிஜா(கீதா), யோகேஸ்வரன் (குமரன்), பரமேஸ்வரன் (குரு-Qatar), தயாழினி (சுகந்தி- France) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயப்பிரகாசன் (ஜெயா- Canada), சுகந்தினி (ஆசிரியர், யா/நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம் ), யோகநாதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வட மாகாணம்), பரன் (Qatar), சுபாஜினி ( ப.நோ.கூ.ச முல்லைத்தீவு ), டுஷிதா, விஜயசுந்தர் (France) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஷ்வின், பிரவின், கபித்தனன், மயூரி, மேனவி, கபிஷன், கோபி, சயானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2023) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, நெடுந்தீவு கிழக்கு கட்டுராமன் சல்லி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**9ஆம் வட்டாரம்,**
**நெடுந்தீவு நடுக்குறிச்சி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்பு: மனோ (மகன்)**
**077 820 7506**

## 06ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1947



மறைவு 14 . 01 . 2017

**அமரர் வைத்திய கலாநிதி**
**Dr. குமாரசுவாமி மகேசன்**

(முன்னாள் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணரும், தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் பொறுப்பதிகாரி – யாழ்ப்பாணம்)


திதி:- சதுர்த்தசி

ஆண்டுகள் ஆறு ஆனது ஐயா
நீங்கள் இவ்வுலகில் இல்லை என்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
என்றும் அழிவதில்லை - ஆறுதல் சொல்ல ....
நமக்கு இனி யார் இவ்வுலகில்?

**நண்பர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 05 . 1945

மறைவு 19 . 01 . 2023

### சின்னத்தம்பி இரத்தினசிங்கம்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினசிங்கம் நேற்று (19.01.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, யோகராசா மற்றும் அப்புத்துரை, சிவராஜா, கமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்ஷினி, உருத்திரன், தாரணி, விகிர்தன், நிர்மலன், தர்மினி தமயந்தி, வைகுந்தன், தமிழினி, கௌமாறன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார், அமுதா, சாந்தீபன், ராதிகா, வசந்தி, உதயகுமார், ராஜேஸ், விதுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், பபிசாந், சங்கீதா, சாருஜா, பிரசாந், மீனுஜா, சர்மிலன், துவாரகன், திவிசாந், பிரதிஸ்னா, அக்ஷயன், தியாஸ், குருசாந், தனுஷாந், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் கீரிமலை தச்சன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல:077 978 7908
077 935 2890

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20335) 1/6

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




நேற்று (19.01.2023) வியாழக்கிழமை
யாழ். உயர் நீதிமன்ற நீதிபதி இரா. கண்ணன்
முன்னிலையில் அகில இலங்கை சமாதான
நீதவானாகச் சத்தியப் பிரமாணம்
செய்து பதவியேற்றுக்கொண்ட சிறுப்பிட்டி மேற்கு
சிறுப்பிட்டியைச் சேர்ந்த

### ஐயம்பிள்ளை துரைராசசிங்கம்

அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களையும்
பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர்:
க. தர்மலிங்கம் JP
க.இராசதுரை
க.இரவீந்திரன்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(cs-23023) (2.6)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சண்முகலிங்கம்
### லதுர்ஜிகாந் (லது)

(உரிமையாளர் - வதனி ஜுவல்லரி, கொடிகாமம்)

மண்ணில்
16.08.1976

விண்ணகம்
14.01.2010

திதி:- சதுர்த்தசி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்டவரே!
உனைப் பிரிந்து நாம் - பதின்மூன்று ஆண்டுகள்
கடந்து உளம் வருந்தும் வேளையில்
மீளாத்துயர் போக்க மீண்டும்
வருவாயோ எம் உயிரே!

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(cs.41939) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து

# வெளிச்செல்லும் பயணிகளிடம் 60 அமெரிக்க டொலர் அறவீடு?

கொழும்பு, ஜன. 21

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிச்செல்லும் பயணிகளிடம் இருந்து 60 டொலர் கட்டணம் அறவிடப்படுகின்றது என்று ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்துக்கு அமைவாக, நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணிலின் அனுமதியுடன் கட்டுநாயக்கவிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு பயணிகளிடம் இருந்தும் இந்த அறவீடு விதிக்கப்படுகின்றது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ம)

வடக்குக்கு வெளியே

# பொதுமுகாமையாளர் நியமனத்துக்கு எதிர்ப்பு

### வடக்கு இ.போ.சபையினர் நேற்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்தியப் பொதுமுகாமையாளராக கிழக்கில் இருந்து ஒருவரை நியமிக்க முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதுவரை வடமாகாண பிராந்திய பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய குணபாலச்செல்வம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில், அவரின் இடத்துக்கு எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் அந்த இடத்துக்கு வடக்குக்கு வெளியில் இருந்து ஒருவரை நியமிக்க முன்னெடுப்புக்கள் இடம்பெறுகின்றன என்று தெரியவருகின்றது. இந்த நிலையிலேயே வடக்குக்கு வெளியிலிருந்து ஒருவர் நியமிக்கப்படக்கூடாது என்றும் வடக்கிலுள்ள தகுதிவாய்ந்த ஒருவரை அந்த இடத்துக்கு நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தற்போது நியமிக்கப்படவுள்ளவர் தற்காலிகமாகவே நியமிக்கப்படுகின்றார் என்றும் தேர்தலின் பின்னர் பணியாளர்களின் கோரிக்கைக்கு அமைய புதியதொருவர் நியமிக்கப்படுவார் என்றும் வாக்குறுதி வழங்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (அ-ம-27)



புலம்பெயர் தேசத்தில் அமரத்துவமடைந்த வவுனியா விபுலானந்தா மகாவித்தியால்த்தின் பழைய மாணவர் அன்ரனி ஜெக்சன் (கண்ணா) நினைவாக, அவரின் குடும்பத்தினரால் வவுனியா பொதுநூலகத்துக்கு 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ம)

உள்ளூராட்சி...

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்துவது சரியானதுதான் இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரன்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை நிறுத்துவது சரி என்பது என்னுடைய கருத்து. இந்த தேர்தல் தேவையற்றது. நாட்டினுடைய பொருளாதார நெருக்கடி மிகமோசமாக இருக்கின்றது.

இந்த நிலைமையில் ஒரு தேர்தல் நடந்தால் மக்களிடையே ஒவ்வொருவருக்கிடையில் முரண்பாடுகளும், பதவிச் சண்டைகளும் அதிகரிக்கும். இது இந்த நாட்டிலே தற்பொழுது ஓரளவு நிலவும் சட்ட ஒழுங்கைக் கூட பாதித்துவிடும். அதைக்காட்டிலும் தேர்தலை நடத்துவதற்கு எத்தனையோ மில்லியன் ரூபா தேவையாக இருக்கிறது. எனவே பணத்தை இதில் கொட்ட வேண்டுமா என்ற கேள்வியும் எழுகின்றது. சிலவேளைகளில் தேர்தல் நிறுத்தப்படக்கூடும். ஆனால், நாம் தேர்தலை எதிர்கொள்வதற்கான கடமையைச் செய்துகொண்டிருக்கின்றோம் என்றார். (அ-ம-27)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
01 . 08 . 1963



இறைவனடியில்
17 . 01 . 2023

## திருமதி மாலதி பிரபாகரன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், Wellington, New Zealandஐ வதிவிடமாக கொண்டவரும், வெலிங்டன் தமிழ் சங்கத்தின் தமிழ் தென்றல் இதழாசிரியரும், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட சமூக மருத்துவத்துறை முன்னாள் காரியதரசியுமான திருமதி மாலதி பிரபாகரன் அவர்கள் 17.01.2023 அன்று இறைபதம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகிறோம்.

இவர் தியாகராஜா (Retired Photogrammetrist, Survey Department, Sri Lanka) - காலஞ்சென்ற சிவமனோகரி தம்பதிகளின் பாசமிகு ஏக புத்திரியும், காலஞ்சென்ற Dr VS பத்மநாதன் மற்றும் சற்குணவல்லி தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மநாதன் பிரபாகரனின் (National Technical Director, Geotechnics and Tunnels, WSP New Zealand) ஆருயிர் துணைவியும், சஞ்சனி (University of Auckland), சிந்தனா (University of Otago) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாகரன், அமிழ்தினி, தயாகரன் ஆகியோரின் மைத்துனியும் ரொமீனா, சுபதரன், ரூபிகா ஆகியோரின் சகலியும் ஆவார்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதி அஞ்சலி விபரங்கள்:

Viewing between 5 pm and 7 pm on Saturday, 21st January 2023 at Gee and Hickton Chapel, Cnr of Knights Road & Cornwall Street, Lower Hutt, New Zealand

Viewing and Funeral between 10 am and 12 noon on Tuesday, 24th January 2023 at Karori Main Chapel, 76 Old Karori Road, Karori, Wellington, New Zealand.

Address: 10, Boronia Grove, Maungaraki, Lower Hutt 5010, New Zealand.
e-mail: brabhaharan@gmail.com
Tel: +64 4 570 9533
Mobile: +64 21 0265 8043

தகவல்:
பத்மநாதன் பிரபாகரன்
சஞ்சனி
சிந்தனா

(CR 39980) 1-6

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
07 - 02 - 1939



மறைவு
20 - 12 - 2022

## அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

எமது குடும்பத்தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் எமது துயரில் பங்கு கொண்டோருக்கும், அஞ்சலிப் பதாகைகள் தந்தும், மலர் வளையங்கள் சாத்தியும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் , மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் பங்கு பற்றி தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்படி அன்பாக வேண்டுகின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு விவசாய நிலங்கள் பாதிப்பு

## கல்மடுக்குள விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி, ஜன. 20

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுக்குளத்தின் கீழுள்ள நெத்தலி ஆற்றை அண்டியுள்ள வயல் நிலங்களில் மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. இதனால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.



விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்;

எமது வயல் நிலங்களில் பல அடி ஆழத்துக்கு தோண்டப்பட்டு இரவோடு இரவாக உழவியந்திரங்கள் மூலம் மணல் அகழ்ந்து செல்லப்படுகிறது.

இந்தமுறை பருவமழை குறைந்ததன் காரணமாக இந்தப் பகுதிகளில் தொடர்ச்சியாக மணலகழ்வு இடம்பெறுகிறது. இதனால் வயல் நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

நெத்தலி ஆற்றைக் கடந்தே மணலை ஏற்றிச் செல்ல நேரிடுவதால் ஆற்றைக் கடப்பதற்கு மின்சார சபைக்குச் சொந்தமான தூண்கள் பயன்படுத்தப்படுகிறது.

மின்சாரக் கம்பத்துக்கு வீதியில் சேதம் ஏற்படுத்தப்பட்டால் பல லட்சம் ரூபா தண்டம் விதிக்கும் மின்சாரசபை இந்தவிடயத்தில் கவனிப்பாரற்றுள்ளது.

அத்துடன் இந்தப் பகுதியில் பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது வயல்களுக்கு சென்று வருவதில் அச்சநிலை தோன்றியுள்ளது.

எனவே இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்தி எமது விவசாய நிலங்களை பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-113)



## பல்கலை மாணவர்களுக்கு தலா 10,000 ரூபா நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜன. 20

லண்டன் சிறி கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினரால் யாழ்.விஷன் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் தெரிவுசெய்யப்பட்ட 100க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா காசோலை கொக்காவில் கிழக்கு அன்பு ஆன்மீக நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ்.விஷன் தலைவர் க.சுசீந்திரன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், யசோதா சரவணபவன், வடமாகாண சபை முன்னாள் எதிர்கட்சித் தலைவர் தவராசா, பல்கலைக்கழக மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14-125)

## யாழ்.பல்கலை பொங்கல் விழா


யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் ஏற்பாட்டில் பொங்கல் விழா, பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது.

பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் பொங்கல் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து கல்விசாரா ஊழியர்கள் மற்றும் வரலாற்றுத் துறையின் நான்காம் வருட மாணவர்களுக்கிடையிலும் கலாசார விளையாட்டுக்கள் இடம்பெற்று பரிசில்கள் வழங்கப்பட்டன.

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் க.அருந்தவராஜா தலைமையில் இடம்பெற்ற விழாவில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஓய்வு நிலை பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14-125)



## சத்ய சாயி பாடசாலை மானிப்பாயில் தொடக்கம்

ஸ்ரீசத்யசாய் வேத பாடசாலை மற்றும் ஸ்ரீ சத்யசாய் மனித மேம்பாட்டுக்கல்வி நிறுவனம் ஆகியவற்றின் தொடக்க நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மானிப்பாயில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீசத்யசாய் வடபிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியாவின் புட்டபர்த்தியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சாய்சகோதரர் ஸ்ரீ வேதநாராயண் கொல்லங்கோடே கலந்து கொள்ளவுள்ளார். (ச)

## மெய்வல்லுநர் போட்டி

சாவகச்சேரி - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், சிறப்பு விருந்தினராக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ஒ-14-9)

## சொற்பொழிவு

இந்தியாவின் புட்டபர்த்தியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள சத்ய சாய்பாபாவின் அனுக்கத் தொண்டரும் சமஸ்கிருத அறிஞருமான சாய் சகோதரர் ஸ்ரீவேதநாராயண் கொல்லங்கோடேவின் சிறப்புச் சொற்பொழிவு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பகவான் ஸ்ரீ சத்யசாய்பாபாவுடனான அனுபவம் குறித்து இதன்போது சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

## கும்பாபிஷேகமும் கோபுர தரிசனமும்

யாழ்ப்பாணம். ஜன. 20

நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பாலஸ்தான கும்பாபிஷேகமும் இராஜகோபுர பூஜையும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன என பாலஸ்தாபன பிரதம குரு அறிவித்துள்ளார். (ச)

## முல்லை மகா வித்தியில் பற்சிகிச்சை நிலையம்

முல்லைத்தீவு. ஜன. 20

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் பற்சுகாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள இந்த பற்சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டது.

பற்சிகிச்சை நிலையத்தை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி மு.உமாசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர். (ஒ-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில்...

உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி பின்னடிக்கின்றதா? வேட்புமனுத் தாக்கல் நிறைவடைய தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? ஆகிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்ததாவது:-

'உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது. அது தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் முடிவு. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலை எதிர்கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் தேர்தல்களில் வென்றும் இருக்கின்றோம், தோல்வியடைந்தும் இருக்கின்றோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றோம் என்பதற்காக நாம் ஒதுங்கி இருக்கவில்லை. வேலை செய்கின்றோம். இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல் மூலம் ஆட்சியை மாற்றமுடியாது. அரசு தோல்வியடைந்தாலும் ஜனாதிபதி அப்படியே இருப்பார். நாடாளுமன்றமும் அப்படியே இருக்கும். நிலைமை அப்படி இருக்கும்போது தேர்தல் தோல்வி பற்றி நாம் பயப்படத் தேவையில்லை' - என்றார். (அ-ம-22)

## தனித்தனியாக...

தனியாக அழைத்து பேச்சை முன்னெடுக்கின்றோம். எனவே, பிரச்சினைகளைக் கட்டம் கட்டமாகத் தீர்ப்போம் இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து சமயங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. அது இந்து சமயமாக இருந்தாலும் சரி பௌத்த சமயமாக இருந்தாலும் சரி. எனவே, நாம் அனைவரும் அதற்கு முகம் கொடுத்துள்ளோம். எனினும், நாம் எமது அடிப்படை கொள்கையிலிருந்து விலகக்கூடாது.

இஸ்லாம், பௌத்தம், இந்து மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த நாம் அனைவரும் எமது சமயத்தின் அடிப்படைகளைத் தேடும் கொள்கைகளில் குறியாக இருக்கவேண்டும். சமயம் வர்த்தகமயப்படுத்தப்பட்டிருப்பதாக நாம் உணருகின்றோம். போர்கள் உருவாகவும் சமயம் காரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எமது அதிகப்படியான நேரம் ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவதிலேயே கழிந்துள்ளது. எனினும், தற்போது இது நல்லிணக்கத்துக்கான நேரமாகும். எனவேதான் நாம் தமிழர்களுடன் பேச்சு நடத்த ஆரம்பித்துள்ளோம். அதாவது இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எவ்வாறு நல்லிணக்கத்துக்குப் பங்களிக்கப் போகின்றார்கள் என்பது பற்றி நாம் ஆராய்ந்தோம். முதற்படி முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மூலமாக நாம் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

மனோகணேசன் என்னை ஏன் உற்றுப் பார்க்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. மலையகத் தமிழர்களை சமூகத்துடன் ஒன்றிணைப்பது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவோம். அவர்கள் தாமதித்து வந்தாலும் அவர்களையும் சமூகத்துடன் நாம் ஒன்றிணைக்க வேண்டும். எமது சமூகத்தில் காலம் தாமதித்து பல இனங்களும் சமயங்களும் ஒன்றிணைக்கப்பட்டாலும் அவர்கள் அதற்குரிய பயனை அனுபவிக்கவில்லை. எனவே அவர்களும் முழுமையாக ஒன்றிணைக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக முஸ்லிம் இனத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் நாம் கலந்துரையாடவேண்டும். 2018 ஆம் ஆண்டின் திகன கலவரம், 2019 ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் என்பன தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்படுவதுடன் அதற்குக் காரணமாக அமைந்த விடயங்கள் தொடர்பிலும் நாம் பேசவேண்டும்.

கொழும்பு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினையிலும் முற்றிலும் வேறுபட்ட பிரச்சினைகளையே இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள முஸ்லிம்களும் மன்னார் முஸ்லிம்களும் எதிர்நோக்குகின்றனர். இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், சிங்களவர்கள் போன்று இவர்களிடமும் பேச்சு நடத்தி அவர்கள் எதிர்கொண்டுள்ள துன்பங்கள், சமூகப் பின்னடைவுகள் உள்ளிட்ட விடயங்களை வெளிக்கொணரவேண்டும். இது நல்லிணக்கம் தொடர்பான மூன்றாம் கட்ட நடவடிக்கையாக அமையும்.

அதேபோன்று சிங்களவர்களுடனும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். அதிலும் பல குழுக்கள் உள்ளன. சிலர் சாதி அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளனர். மேலும், பலரைச் சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை. இதுபோன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே எனக்குசமூகநீதிஆணைக்குழுவொன்றை அமைக்கவேண்டிய தேவையுள்ளது. எனவே, ஏனைய முஸ்லிம் குழுக்களுடனும் கலந்துரையாடி அவர்களுக்குள்ள பிரச்சினைகளை எமது மூன்றாம் கட்டச் சந்திப்பின்போது எமக்கு அறியத்தருமாறு நான் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையைக் கேட்டுக் கொள்கின்றேன்' - என்றார். (அ-ம-22)

## தமிழ்த்...

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்துள்ள சூழலில் அனைத்துத் தரப்பையும் ஓரணியாக, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இன்று சந்திக்கின்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா ஆகியோரை ஒன்றாக மு.ப. 11.15 மணிக்குச் சந்திக்கின்றார். எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நண்பகல் 12 மணிக்கே அவர் சந்திக்கவுள்ளார். இந்திய அதிகாரிகளின் அழைப்புக்கு அமைவாகவே இந்தச் சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## அரச...

பிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய பொங்கல் நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். அதன்போது அவருக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமிகள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலரைக் கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-27)

## சிறையில்...

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 37 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2 கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கடந்த 10ஆம் திகதி அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். ஈரலில் தொற்று ஏற்பட்டுள்ளமையும் அவரது உயிரிழப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5-26-27)

## முதல்வர்...

ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநருக்கும், யாழ். மாநகரசபையின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தின் முழு விவரமும் வருமாறு:-

2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ், 09.01.2023 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் தங்களால் கூட்டப்பட்ட யாழ். மாநகரசபை முதல்வர் தெரிவுக் கூட்டம் முறையற்ற விதத்தில் முடிவுறுத்தப்பட்டமைக்கான எமது ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்கிறோம். கூட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் 24 பேர் கலந்துகொண்டிருந்தனர். 'கூட்டத்தில் 24 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருப்பதனால், தேவையான நிறைவெண் இருப்பதனால் கூட்டம் ஆரம்பிக்கப்படுகிறது' எனத் தெரிவித்திருந்தீர்கள். அத்துடன் முதல்வர் தெரிவுக்கான முன்மொழிவைக் கோரினீர்கள்.

முதல்வராக எமது கட்சியின் உறுப்பினர் இ.ஆர்னோல்ட்டின் பெயர் முன்மொழியப்பட்ட பின், வேறேதும் முன்மொழிவுகள் இல்லாத நிலையில் முதல்வராக இம்மானுவல் ஆர்னோல்ட் தெரிவாகும் ஏதுநிலை காணப்பட்டது. இந்த நேரத்தில் முன்மொழிவை ஆட்சேபித்து தாம் வெளியேறுவதாக, சபையின் நான்கு உறுப்பினர்கள் வெளியேறினர்.

அந்த நேரத்தில் சட்ட ஏற்பாடுகளுக்குப் புறம்பாக தாங்கள் கூட்டத்தை ஒத்திவைப்பதாக அறிவித்தீர்கள். இது நியாயமற்ற ஒரு அறிவிப்பு என உடனடியாகவே சபையில் எம்மால் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது. எனினும், எமது கோரிக்கையைக் கணக்கெடுக்காமல் தாங்கள் கூட்டத்தை இடைநிறுத்திவிட்டு, சபை மண்டபத்திலிருந்து வெளியேறினீர்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் தேவையான கோரம் இருந்தபோதிலும், தெரிவுக்காக வேறு முன்மொழிவு இல்லாத கரணத்தினாலும், நான்கு உறுப்பினர்களின் வெளியேற்றம் காரணமாக கோரமில்லை என்று எந்தவொரு உறுப்பினரும் ஆட்சேபனையும் தெரிவிக்காத காரணத்தினாலும் முன்மொழியப்பட்டபடி இம்மானுவல் ஆர்னோல்டை முதல்வராக ஏகமனதாக அறிவிக்கப்பட்டிருப்பதே பொருத்தமானதென நாங்கள் கருதுகிறோம். எனவே இது தொடர்பாகத் தாங்கள் இழைத்த தவறை நிவர்த்தி செய்யத் தவறுவீர்களாயின் நாம் சட்ட நடவடிக்கையை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதைத் தங்களுக்கு அறியத் தருகிறோம்' - என்றுள்ளது. (அ-ம-26)

## அமைச்சர்களாக...

பேற்றுக்கொண்டனர்.

பவித்ரா வன்னியாராச்சி வனஉயிரிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சராகவும், ஜீவன் தொண்டமான் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். (ம)

## 100 கிராம்...

கொழும்பிலிருந்து ஹெரோய்னை எடுத்துவந்தார் என்றும் அது விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தபோதே அவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸாரின் முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-20-26)

## ஒத்திவைக்கப்பட்டது...

அமர்வு நேற்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் இடம்பெற்றது.

மாநகரசபையின் 45 உறுப்பினர்களில் 24 உறுப்பினர்கள் சபையில் நேற்றுப் பிரசன்னமாகி இருந்தனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி.யின் 10 உறுப்பினர்களில் 4 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தலா ஒருவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் 3 பேரும் பிரசன்னமாகியிருந்தனர்.

24 பேர் சபையில் இருப்பதால் கோரம் உள்ளமையால் மேயர் தெரிவை உள்ளூராட்சி ஆணையாளர் தொடங்கினார். இதற்கு அமைவாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் இ.ஆர்னோல்ட்டின் பெயரை உறுப்பினர் பி.இ.கிறேசியன் முன்மொழிய உறுப்பினர் என்.எம்.பாலச்சந்திரன் வழிமொழிந்தபோது வேறு பெயர்கள் சபையில் முன்மொழியப்படவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் மு.ரெமிடியஸ்டன் சேர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்களுமாக 4 பேர், இந்தத் தெரிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறுவதாகக்கூறி சபையில் இருந்து வெளியேறினர்.

இதனையடுத்து சபையில் கோரம் போதாமை காரணமாக வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்படுவதாக ஆணையாளர் தெரிவித்தபோது, கோரம் இருப்பதாக அறிவிக்கப்பட்டே தேர்வு ஆரம்பமாகியது என்றும், முதல்வர் வேட்பாளரை எதிர்த்தே உறுப்பினர்கள் வெளிநடப்பு எனவும் தேர்வை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை எனவும் உறுப்பினர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.

இருப்பினும், கோரம் இல்லாமையால் முதல்வர் தெரிவு ஒத்திவைக்கப்படுகின்றது என்றும், அடுத்த திகதி உரிய முறையில் அறிவிக்கப்படும் எனவும் உள்ளூராட்சி ஆணையாளர் சபையில் அறிவித்து ஒத்திவைத்தார். நேற்றைய சபை அமர்வில் கலந்துகொள்ள வந்த அனைவருக்கும் மாஸ்க் வழங்கப்பட்டு, உடல் வெப்பநிலை சோதிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்பட்டது. (அ-ஒ-5-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் வேலைவாய்ப்பு, கல்வி-கருத்தரங்கு

Hotel Managment / Health care
போன்ற துறைகளில் Work Permit எடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் Student Visa விற்கான ஆலோசனைகளும் அனுமதிகளும் கனடாவிலிருந்து வருகைதந்திருக்கும் அங்கீகரிக்கப்பட்ட கனடிய குடிவரவு ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்

**CANADA MIGRATION PILOT**

திகதி- 21.01.2023 (சனிக்கிழமை) நேரம்- 12 மணி

கட்டணம் :- 2000/= (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

**CIMS COLLEGE** 49A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 0777-068-777

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஹாட்வெயர் கடைக்கு வேலையாள்கள் தேவை.

1) விற்பனைப் பிரதிநிதிகள்
2) உதவியாளர்

**T.P: 077 494 9683, 076 154 8866**
சுயவிபரக் கோவையை Whats app செய்யவும்.

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.

1) விற்பனைப் பிரதிநிதிகள்
2) உதவியாளர் (ஆண், பெண்)

**T.P: 077 494 9683, 076 154 8866**
சுயவிபரக் கோவையை Whats app செய்யவும்.

## TECHNO WORLD
### தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L** புதிய கல்வியாண்டு **2024**

- திகதி : 23.01.2023 ( திங்கட்கிழமை)
- நேரம் : காலை 8.00

(ஆரம்பத்திலிருந்து செயன்முறை வகுப்புக்கள் நடைபெறும்)

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும்
5ஆவது முறையாகவும்
98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

**077 017 5346**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத் திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம் 077 8147 389 / 077 9865 457


## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் தர்மசீலன்

(B.Sc. Physical Science)



தோற்றம் 06.10.1980 — மறைவு 18.01.2023

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும். Burges Road, East Ham, London, UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் தர்மசீலன் கடந்த (18.01.2023) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் செல்வநாயகம் பாக்கிய லட்சுமி தம்பதிகளின் அருமை மகனும். தையிட்டி தெற்கைச் சேர்ந்த செல்வரட்ணம் சறோயினி தம்பதிகளின் அன்பு மருமகனும். ரெனீசியாவின் அன்புக் கணவரும். தெய்வீகனின் அன்புத் தந்தையும். சதீஷ். ரெனீஸ். தினேஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.01.2023) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

**077 530 4156** (CS/48686)4/6)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கனகரத்தினம்

மலர்வு 26.04.1931 — உதிர்வு 19.01.2023



கருகம்பனையை பிறப்பிடமாகவும் பன்னாலை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் 2023.01.19 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம். வைரவப்பிள்ளை. சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சோமசுந்தரம் அமரர் தெய்வானைப்பிள்ளை. அமரர் சிவபாக்கியம் மற்றும் இராஜலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலாவதி. ரவீந்திரன். கருணாவதி (ஆசிரியர்-யா/வறுத்தலைவிளான் அ. மி. த. க பாடசாலை). சசிகரன். பகிதரன். வசிகரன் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்பு தந்தையாரும் சத்தியலிங்கம். வாசுகி. தேவதாசன். செல்வராணி. கமலாம்பிகை(ஆசிரியர்-யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ). கலைஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனீஷா. கஸ்தூரி. பகீரதி. யதுசிகா. ருஜாந்தன். ருயாந்தி. சயந்தினி. கிஷாலினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.01.2023 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்தில் இடம்பெறும்.

நெருஞ்சியோலை
பன்னாலை, தெல்லிப்பழை.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 817 7851, 077 581 3280, 077 654 5142**

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 04 . 1937 — மறைவு 17 . 01 . 2023

### கதிர்காமு பசுபதி (பொம்மியர்)

குருக்கட்டு, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஸ்ரீராமஜெயம் கரணவாய் மத்தி , கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு பசுபதி கடந்த (17.01.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு பார்வதி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பவானந்தன், பவானி, நித்தியானந்தன், உமா, கோகுலானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம் இராசம்மா, கணபதிப்பிள்ளை - இராசம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற இரவீந்திரநாதன், கேதீஸ்வரன், கமலேஸ்வரி, பத்மாவதி, குமுதினி, மதிவதனசிங்கம், துஷ்யந்தி, சுதா ஆகியோரின் மாமனாரும், சியாமளா, தர்மிக்கா, துளசிகா, லக்ஷிகா, நிரோஜா, நிரோஷன், நிஷோபனா, சுபனி, அபினா, வினோஷியா, விதுஷா, நிரூஜன், நிவேதன், அபிஷா, ஆதித்யா, அனிஸ், ருவீற்ஷா ஆகியோரின் அன்பு பேரனும், ரிவிஜாவின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் எள்ளங்குளம் இந்துமாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: **021 205 6922** (மகேஸ்வரி)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 23011) (2.6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org